**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

IN THE COURT OF : Sessions Court for trial of
Communal Clash Cases in Southern Districts
Madurai.

Calender : **SC.No.2/2010**

Miscellaneous :

Preliminary Register :

Sessions :

Deposition of witness for **Prosecution அ.சா. 29**
**Defence Court**

Name :நவாஸ்

Village :

Taluk :

Caste :

Calling :

Religion :

Age :

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 02.06.2022

**முதல் விசாரணை**:

நான் தற்போது தென்காசியில் கன்னிமாரியம்மன் கோவில் தெருவில் வாட்ச் ரிப்பேர் கடை நடத்தி வருகிறேன். இந்த வழக்கு தொடர்பான சம்பவம் பற்றி தெரியாது. 14.08.2007 ம் தேதி நான் எனது கடையை திறக்க செல்லவில்லை. ஏனென்றால் நான் கடையை 10.30 க்கு மேல் தான் திறப்பேன். அதற்கு முன்பாகவே சம்பவம் நடந்ததாக அப்பகுதியில் இருந்த மக்கள் அங்கும் இங்கும்

ஓடிக்கொண்டிருநதார்கள். அதனால் நான் கடையை திறக்கவில்லை. நான் காலை 10.30 கடையை திறந்து இரவு 9.30 மணிக்கு மூடிவிடுவேன். இடையில் 2.00 மணியில் இருந்து 5.00 மணிவரை மூடிவிடுவேன். இந்த சம்பவத்திற்கு முதல் நாள் வரை கடைக்கு சென்று வந்தேன். எதிரிகளை எனக்கு தெரியாது. இந்த வழக்கின் சம்பவம் பற்றி தெரியாது. அன்றைய தினம் நான் கடையை திறக்க வில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**<u>இந்நிலையில், இந்த சாட்சியினை பிறழ்சாட்சியாக விசாரிக்க அரசு தரப்பில் அனுமதிகோரப்பட்டு, அதன்பேரில் அனுமதி வழங்கப்பட்டது</u>**:-

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

போலீசார் என்னை விசாரித்தார் என்றும் அவ்வாறு என்னை விசாரித்தபோது இந்த வழக்கில் குறிப்பிடப்பட்டுள்ள முருகேசன் என்ற அப்துலலா நாகூர்கனி ஆகியோர் அலாவூதின், அசன்கனி, ராஜாமுகம்மது, மேசாத், நாகூர்மீரான், பசீர்முகம்மது, அபூ, செய்யது அலி, நவாப் ஆகியோரும் வேறுசிலரும் அவ்வப்போது என் கடை முன்பாக நின்று பேசிக்கொண்டிருப்பார்கள் என்றும் வேறு சில நேரங்களில் 4, 5 ஆட்டோக்கள் மற்றும் இருசக்கரவாகனங்களில் அங்கும் இங்குமாக வந்து கண்காணித்துக்கொண்டிருப்பார்கள் என்றும் அவ்வாறு அவர்கள் பேசி கொண்டிருந்தபோது பேசுவதை கவனித்ததில் இருந்து வெட்டுவதற்கு மேலமுத்தாரம்மன் கோவில் பக்கம் தான் அவர்களை மறிக்க சரியான இடம் என்றும் அந்த இடம் குறுகலான இடம் என்பதால் காரில் வந்தாலும் மறித்து விடலாம் என்றும் தப்பி செல்ல இயலாது என்றும் அவர்களால் பள்ளி வாசல் கட்டுவதற்கு இடையூறு ஏற்பட்டு வருகிறது என்றும் பணத்தை பற்றி கவலை இல்லை என்று கூறி பேசிக்கொண்டிருந்தார்கள் என்றும் நான் கவனித்தேன் என்ாறல் சரியல்ல. அதன் தொடர்ச்சியாக 14.08.2007 அன்று காலை வழக்கம்

போல் நான் கடையை திறக்க வரும்போது சுமார் 10.30 மணியளவில் ஒருவருக்கொருவர் வெட்டு குத்து என்று ஓடிக்கொண்டிருந்தனர் என்றும் நானும் கடையை திறக்காமல் ஓடிவிட்டேன் என்றும் கூறியிருக்கிறேன் என்றால் சரியல்ல. நான் குடியிருப்பது அரிப்புக்கார தெரு ஆகும். கன்னிமாரியம்மன் கோவில் தெருவிற்கும் அரிப்புக்கார தெருவிற்கும் இடையே 1 கிலோ மீட்டர் இருக்கும். இரண்டுக்கும் இடையேதொடர்ச்சியாக வீடுகள் மற்றும் கடைகள் இருக்கும் என்றால் சரிதான். இடைப்பட்ட பகுதியில் தான் இவ்வழக்கின் பெரும்பாலான எதிரிகள் குடியிருந்துவருகிறேன் என்றும் வேண்டுமென்றே தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளை எனக்கு தெரியும் என்றும் எதிரிகள் மீது குற்ற வழக்கு இருப்பதாலும், எதிரிகளுக்கும் அவர்களது எதிரிகளான மற்றொரு வழக்கின் எதிரிகளுக்கும் இடையே உள்ள பிரச்சனையில் என்னையும் தொடர்பு படுதததி கொள்ளக்கூடாது என்பதற்காக நான் எதிரிகளை பற்றி தெரியாது என பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிதரப்பில் குறுக்கு விசாரணை இல்லை.**